1979 அக்டோபர் 27]

அவர்கள் சொன்னார்கள். அதற்கு பதில் இல்லை. குறிப்பாக, புளி மிளகாய் கூட நியாயவிலைக் கடைகளில் கிடைப்பதில்லை. அவைகள் கிடைப்பதற்கு ஏற்பாடு செய்யப்படுமா? ஸ்டாண்டர்டு கிளாத் கிடைப்பதற்கும் ஏற்பாடு செய்யப்படுமா? ஊழியர்கள் சம்மந்தப்பட்ட வரையில் 8 மணி நேரத்திற்கு மேல் வேலை செய்ய வேண்டும் என்று நிர்ப்பந்தப்படுத்த வேண்டிய அவசியம் இல்லை. கிராமப்புற மக்கள் வந்து வாங்கக்கூடிய வகையில் நேரத்தைத் திருத்தி, மாலை 4 மணியிலிருந்து ஒரு குறிப்பிட்ட நேரம் வரை கடையைத் திறந்து வைப்பதற்கு ஏற்பாடு செய்ய அரசு வழிவகுக்குமா?

மாண்புமிகு திரு க. உரோ. எட்மண்ட்: மாண்புமிகு பேரவை தலைவரவர்களே, அத்தியாவசியப் பண்டங்கள் நியாய விலைக் கடைகளில் கிடைக்கின்றன. சில நேரங்களில் கிடைக்காமல் இருக்கலாம். ஆனால், எந்த நாளும் கிடைக்கவில்லை என்று சொல்வதை நான் ஏற்றுக் கொள்வதற்கில்லை. விவசாயத் தொழிலாளர்கள் மாலையில் நியாயவிலைக் கடைகளில் சாமான்களை வாங்கும் பொருட்டு ஊழியர்களுடைய வேலை நேரத்தை மாற்றியமைப்பது பற்றிக் கேட்டார்கள். நிச்சயமாக அதைப் பற்றி அரசு யோசிக்கும்.

ஊழியர்கள் அந்தக் கருத்தை ஏற்றுக்கொள்ளாத நேரத்திலே எதிர்க்கட்சியைச் சேர்ந்தவர்கள் அரசுக்கு உறுதுணையாக இருப்பார்கள் என்று நான் நம்புகிறேன்.

[முற்பகல் 9–30]

அரியலூர் மற்றும் ஜெயங்கொண்ட சோழபுரத்தில் நீதிமன்றங்கள் அமைத்தல்.

The Hon. THIRU K. NARAYANASWAMY ; Question No. 7 and 8 may be taken together as they relate to the same subject matter.

*வினா எண் 7 திரு. வெ. கருணாமூர்த்தி: மாண்புமிகு சட்டத் துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா:

(அ) அரியலூரில் சப் கோர்ட் ஒன்றும் ஜெயங்கொண்ட சோழபுரத்தில் ''முன்சிப் கோர்ட்'' ஒன்றும் ஏற்படுத்தும் திட்டம் அரசின் பரிசீலனையில் உள்ளதா?

(ஆ) ஆம் எனில் தற்போதைய நிலை என்ன?